


ஈரோடு மாநகராட்சி நான்காவது மண்டலத்துக்குட்பட்ட கருங்கல்பாளையம் பகுதி 39வது வார்டில் பகுதி சபை கூட்டம் மாமன்ற உறுப்பினர் கீதாஞ்சலி செந்தில்குமார் தலைமையில் மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் மணீஷ், மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், துணை மேயர் வி.செல்வராஜ், நான்காம் மண்டல தலைவர் குறிஞ்சி, என்.தண்டபாணி, மண்டல உதவி ஆணையாளர் கிருஷ்ணமூர்த்தி முன்னிலையில் கேபிள் ஆர்.செந்தில்குமார் வரவேற்பில் நடைபெற்றது. பகுதி சபை கூட்டத்தில் ஏராளமான பொதுமக்கள் மனு அளித்தனர். மனுக்கள் மீது ஆய்வு செய்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர். நிகழ்வில் மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியன், காங்கிரஸ் கட்சியின் 2வது மண்டல தலைவர் ஜாபர்சாதிக், மாமன்ற உறுப்பினர்கள் செந்தில்குமார், சரண்யா, சங்கமேஸ்வரன், மங்கேஸ்வரி, புனிதன் வட்ட செயலாளர்கள் கே.டி..மகேஸ்வரன் குணசேகரன், பாபு (எ) ஜாபர் சாதிக உள்ளிட்ட மாநகராட்சி அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.





விழுப்புரம் தெற்கு மாவட்ட மகளிர் அணி–மகளிர் தொண்டர் அணி ஆலோசனைக் கூட்டம் விழுப்புரம் கலைஞர் அறிவாலயம் தளபதி அரங்கத்தில் விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி தலைமையில் நடைபெற்றது. மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கா.அமுதா வரவேற்புரை ஆற்றினார். மாவட்ட அவைத்தலைவர் ம.ஜெயச்சந்திரன், சட்டமன்ற உறுப்பினர்கள் அன்னியூர் ஆ சிவா, டாக்டர் இரா இலட்சுமணன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாவட்ட துணை செயலாளர் தயா.இளந்திரையன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கழக துணைப் பொதுச் செயலாளர், வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, மகளிர் அணி இணைச் செயலாளர், முன்னாள் அமைச்சர் தமிழரசி ரவிக்குமார், மாநில மகளிர் அணி சமூக வலைதள பொறுப்பாளர் ஏ.ரியா மாநில மகளிர் அணி பிரச்சாரக் குழு செயலாளர் எம் தேன்மொழி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.மாவட்ட மகளிர் அணி தலைவர் ஏ.ஜி.செல்வி, மாவட்ட மகளிர் தொண்டரணி தலைவர் பிரான்சிஸ்கா மேரி, துணைத் தலைவர்கள் சாந்தி, சிவபூஷனம், துணை அமைப்பாளர்கள் சந்திரலேகா, பிரியங்கா, அமுதா, கலையரசி, இராஜேஸ்வரி, நாகவள்ளி, சிவ மகேஸ்வரி, பூஜா, தவமணி மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் அருள்மொழி நன்றியுரையாற்றினர்.

## கடந்த அ.தி.மு.க. அரசால் தொடரப்பட்ட பொய் வழக்கிலிருந்து

# கோவை மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் உள்ளிட்ட 5 பேர் விடுதலை!

### கழகத்தினர் உற்சாக வரவேற்பு!



கோவை, அக்.2-

அ.தி.மு.க. ஆட்சியில், கடந்த 2014 ம் ஆண்டு பாப்பநாயக்கன் பாளையத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் எழுதிய" ஒய்யாரக் கொண்டையாம் தாழம்பூவாம்" என்னும் புத்தகத்தை கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா.கார்த்திக், அன்றைய தினம் பகுதி கழக செயலாளராக இருந்தபோது பொது மக்களுக்கு வழங்கினார். அப்போது, அங்கிருந்த அதிமுக கொடி கம்பம், பெயர் பலகையை அடித்து உடைத்து அதிமுக நிர்வாகிகளை தாக்கியதாக பொய் வழக்கு போடப்பட்டது. இதில், 147,148,294(b), 506(ii), 427,341, and 323 IPC ஆகிய பிரிவுகளின் கீழ்

கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா.கார்த்திக், பொதுக்குழு உறுப்பினர் மணிகண்டன், பழையூர் சோமு, ஆனந்தன், ராஜா, பத்மநாபன், இரவிச்சந்திரன் ஆகிய 7 பேர் மீது வழக்கு தொடரப்பட்டது.

இதில், வழக்கின்போது, வட்டச்செயலாளர் இரவிச்சந்திரன், வட்ட பிரதிநிதி பத்மநாபன் ஆகியோர் இறந்து விட்டனர்.

கடந்த 10 ஆண்டுகளாக கோவை நீதிமன்றத்தில் நடந்து வந்த இந்த வழக்கு, கோவை ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் உள்ள முதலாவது நீதிமன்றத்தில், இறுதி விசாரணை நிறைவுற்று, நீதிபதி கோபாலகிருஷ்ணன் தீர்ப்பு வழங்கினார். இதில், குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுதலை செய்யப்படுவதாக தீர்ப்பு கூறினார். இந்த வழக்கில் வழக்கறிஞர்கள் அகஸ்டின், உள்ளிட்ட வழக்கறிஞர்கள் வாதாடினர்.

இந்நிலையில், இந்த வழக்கில் கோவை மாநகர் மாவட்ட செயலாளர் நா.கார்த்திக் உள்ளிட்ட அனைவரும் விடுதலை செய்யப்பட்ட நிலையில், கோவை நீதிமன்ற வளாகத்தில், மாவட்ட செயலாளர் நா.கார்த்திக் அவர்களுக்கு, ஏராளமான திமுகவினர் மலர் மாலை அணிவித்து வாழ்த்துகளை தெரிவித்தனர்.

தொடர்ந்து நா.கார்த்திக் பேட்டியின்போது கூறுகையில்;

2014-ம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் எழுதிய " ஒய்யாரக் கொண்டையாம், தாழம்பூவாம்" என்ற நூலை பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் பொதுமக்களுக்கு அந்த புத்தகங்களை வழங்கினோம். அப்போது, அன்றைய அதிமுக ஆட்சியில், எஸ்பி. வேலுமணி தூண்டுதலின் பேரில், திட்டமிட்டு எங்கள் மீது பொய் வழக்கு போட்டனர். அந்த வழக்கை சட்டத்தின் மூலம், எங்கள் திமுக வழக்கறிஞர்கள் மூலம் எதிர்கொண்டு, அந்த வழக்கு புனையப்பட்ட பொய் வழக்கு என்பதனை நிரூபித்துள்ளோம். அது வழக்கில் குற்றமற்றவர்கள் என நீதியரசர் எங்கள் அனைவரையும் விடுதலை செய்துள்ளார். இதுபோன்ற அதிமுகவின் பொய் வழக்குகளால், திமுகவினரை பழிவாங்க முடியாது. இது பொய் வழக்கு என்பது தற்போது நிரூபணமாகியுள்ளது என்று கூறினார்.

நீதிமன்ற வளாகத்தில், கழக சட்டத்துறை இணைச் செயலாளர் வழக்கறிஞர் பி.ஆர்.அருள்மொழி, திமுக தலைமைச் செயற்குழு உறுப்பினர் வே.பாலசுப்பிரமணியன், தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர் இரா. மணிகண்டன், வழக்கறிஞர்கள் அகஸ்டஸ், ப.கிருஷ்ணமூர்த்தி, மாநகர் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் அன்புச் செழியன், மாநகர் மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் மருது பாண்டியன், சரவணன், ஆர்.விஜயராக வன்,என். ஆர்.விக்ரம்,முத்து விஜயன், மதிவாணன், கண்ணன், சலாவுதீன்,சி.என்.சந்திரன், குமணன், மணிவேல்,ராஜமாணிக்கம், முத்துக்குமார், ஜீவா, நிஜலிங்கப்பா, ராஜ்குமார், லிங்க ராஜா, வினோத் குமார், சதீஷ், மகாவிஷ்ணு, மணிகண்டன், ஆனந்த குமார், விஷால்,

சந்திரமோகன், வெங்கடாசலம், முருகானந்தம், சந்திரமோகன், பிரபாகரன், ஸ்டீபன், சின்னத்துரை, மாதவன்,எலிசபெத் ராணி, கலைவாணி, மோகன்குமார், பழையூர் சோமு, ஆனந்தன்,ராஜா, பொதுக்குழு உறுப்பினர்கள் ஆடிட்டர் சசிகுமார்,மு.மா.ச.முருகன்,பெரியகடை வீதி பகுதி2 செயலாளர் வி.ஐ.பதுருதீன்,சாயிபாபா காலனி பகுதி செயலாளர் கே.எம்.ரவி, கஸ்தூரி அருண், அணிகளின் தலைவர்கள்,அமைப்பாளர்கள் பொறியாளர் அணி அமைப்பாளர் நா.பாபு, சிறு பான்மையினர் நலக்குழு அமைப்பாளர் இலா.தேவசீலன், கண்ணதாசன், மாநகர் மாவட்ட தொழிலாளர் அணி தலைவர் கே.ஆர். ராஜா, தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் ஆர்.கே.சுரேஷ்குமார், நெசவாளர் அணி வி.மணி, இலக்கிய அணி மருதமலை ராஜ்குமார், விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் பூர்ணசந்திரன்,வட்டக்கழக செயலாளர்கள் டவுன் பா.ஆனந்தன், கி.நாராயணன்,எஸ்.ஜே.தாஸ்,கே. ராமநாதன், விஜய குமார்,மு.சசிகுமார், வீரமணி,எஸ்.போஸ்,நா.சண்முகசுந்தரம், முருகானந்தம் ,நா.தங்கவேல்,கேசவன் ex. mc., சு.தனபால், சபரி கோபால், அபி,இரா.நாகராஜ், காளிதாஸ், ஆண்ட்ரூஸ்,சாரமேடு இஸ்மாயில்,பிரின்ஸ்,பூ.வெ.துரைசாமி, கிரீன் வேசுப்பிரமணி, சுந்தர்ராஜன், சந்திரன் ,ஜெயராஜ், மகேந்திரன், குடை ஆறுமுகம், பாலச்சந்தர், கங்கை ரவி,வி.லட்சுமணன்,வி.ஆர்.வெங்கடேஷ், வைரமணி,எஸ்.டி.எஸ்.சரவணன், ஜனார்த்தனன், நந்தகுமார்,கழக நிர்வாகிகள், கழக உடன்பிறப்புக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் திரண்டு வாழ்த்து தெரிவித்தனர்.





முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் கழக பவள விழாவை முன்னிட்டு மணம்பூண்டி ஒன்றியம் அந்திலி, நெற்குணம், தேவனூர் கூட்ரோடு, மணம்பூண்டி, கோட்டமருதூர் ஆகிய ஊராட்சிகளில் விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் டாக்டர்.பொன். கௌதமசிகாமணி கலந்து கொண்டு கழகக் கொடியேற்றி இனிப்புகள் மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். ஒன்றியச் செயலாளர் அ.சா.ஏ பிரபு வரவேற்புரை ஆற்றினார். மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயசந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் டி.என்.முருகன், மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் மு.தங்கம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.செல்வராஜ், ஒன்றியச் செயலாளர்கள், ஒன்றியச் செயலாளர் ஜி.இரவிச்சந்திரன், கல்பட்டு வி.இராஜா, நகர செயலாளர் கோபிகிருஷ்ணன், பேரூராட்சி மன்றத் தலைவர் ராயல் எஸ் அன்பு, பேரூர் செயலாளர் சுந்தரமூர்த்தி, ஒன்றிய குழுத் தலைவர் தனலட்சுமி உமேஷ்வரன், ஒன்றிய நிர்வாகிகள் சக்தி சிவம், ஜெய்சங்கர், அந்தோணியம்மாள், வெங்கடேசன், மணிவண்ணன், பிரகாஷ், கணேசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### அரியலூர் மாவட்டம்

## தா.பழூர் மேற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்

### தலைமைக் கழக அறிவிப்பு

அரியலூர் மாவட்டம், தா.பழூர் மேற்கு ஒன்றியச் செயலாளர் வா.சௌந்தர்ராஜன் அவர்கள் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **ப.தனவேல்** (தெற்கு தெரு, வெண்மான்கொண்டான் &அஞ்சல், உடையார்பாளையம் வட்டம், அரியலூர் மாவட்டம் 621 804) அவர்கள் தா.பழூர் மேற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 30.09.2024

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

### தி.மு.க. வர்த்தகர் அணி

## திருவண்ணாமலை வடக்கு மாவட்ட துணை அமைப்பாளர் நியமனம்

### தி.மு.க. வர்த்தகர் அணிச் செயலாளர் காசி முத்துமாணிக்கம் அறிவிப்பு

திருவண்ணாமலை வடக்கு மாவட்ட வர்த்தகர் அணி துணை அமைப்பாளராக ஏற்கனவே நியமிக்கப்பட்ட கே.எஸ். பாபு அவர்கள் மறைவெய்திய காரணத்தால் **வி.கோபு** (நெ. 82, சன்னதி தெரு, திருவோத்தூர், செய்யாறு வட்டம், திருவண்ணாமலை மாவட்டம்) அவர்கள் திருவண்ணாமலை வடக்கு மாவட்ட வர்த்தகர் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட மாவட்ட வர்த்தகர் அணி நிர்வாகிகளுடன் இவர் இணைந்து பாணியாற்றுவார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 30.09.2024

**காசி முத்துமாணிக்கம்**
செயலாளர்,
தி.மு.க. வர்த்தகர் அணி

### தி.மு.க. தொண்டர் அணி

## திருப்பூர் தெற்கு மாவட்ட துணை அமைப்பாளர் நியமனம்

### தொண்டர் அணிச் செயலாளர் பெ.சேகர் அறிவிப்பு

திருப்பூர் தெற்கு மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் ஆர்.சரவணகுமார், அவர் வகித்து வந்த பொறுப்பிலிருந்து விடுவித்துக் கொண்டதால், அவருக்குப் பதிலாக **எ.முகமது அப்பாஸ் அலி** (302/6, வசந்தம் நகர், பைபாஸ் சாலை, தாராபுரம் - 638 657, திருப்பூர் மாவட்டம்) அவர்கள் திருப்பூர் தெற்கு மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 30.09.2024

**மாஸ்டர் பெ.சேகர்,**
செயலாளர்,
தி.மு.க. தொண்டர் அணி

#### தலைமை : தா.கிறிஸ்துராஜ் முன்னிலை : சிவசேனாபதி சாமிநாதன் வரவேற்புரை கார்த்திகேய சிவசேனாபதி

# நொய்யல் வனம் திட்ட துவக்க விழா!

### ஜெ.ஜெயரஞ்சன் - ந.தினேஷ் குமார் பங்கேற்பு!

திருப்பூர், அக்.2-

திருப்பூர் மாவட்டம், காங்கயம் தாலுகா, குட்டப் பாளையம் சேனாபதி காங்கயம் கால்நடை ஆராய்ச்சி மையம் மற்றும் வனத்துக்குள் திருப்பூர் இணைந்து நடத்தும் நொய்யல் வனம் நொய்யல் நதிக்கரை பகுதிகளில், தனியார் பங்களிப்பில், தனியார் நிலத்தில் பெரும் பரப்பளவில் மரக்கன்றுகள் நட்டு வளர்த்து சுற்றுச்சூழல் காக்கும் நொய்யல் வனம் திட்ட துவக்க விழா இன்று (02.10.2024-புதன்கிழமை) காலை 08 மணியலவில் திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமை யில் சேனாபதி காங்கயம் கால்நடை ஆராய்ச்சி மைய தலைவர், குட்டப்பாளை யம் சாமிநாதன் கல்வி மற்றும் அறச்செயல் அறக்கட்டளை தலைவர், குட்டப்பாளையம் ஸ்ரீ அரவிந்தர் சொசைட்டி செயலாளர் சிவசேனாபதி சாமிநாதன் முன்னிலையில் அயலகத்தமிழர் நல வாரிய தலைவர், கழக சுற்றுச்சூழல் அணி செயலாளர், சேனாபதி காங்கயம் கால்நடை ஆராய்ச்சி மைய நிர்வாக அறங்காவலர் கார்த்திகேய சிவசேனாபதி வரவேற்புரையில் வெகு சிறப்பாக நடைபெற வுள்ளது.

இவ்விழாவில் தமிழ்நாடு அரசு மாநில திட்டக் குழு துணைத் தலைவர் ஜெ.ஜெயரஞ்சன், திருப்பூர் மாநகராட்சி மேயர், திருப்பூர் வடக்கு மாநகர செயலாளர் ந. தினேஷ்குமார் ஆகியோர் மரக்கன்று களை நட்டு வைக்கின்றனர். இதில் "வெற்றி" நிர்வாக அறங்காவலர் டி.ஆர்.சிவராம்,

சென்னை, ரோஜா முத்தையா ஆய்வு நூலக இயக்குனர், சேனாபதி காங்கயம் கால்நடை ஆராய்ச்சி மைய அறங்கா வலர் சுந்தர் கணேசன், திரைப்பட இயக்குனர் செல்வி. ஹமிதா சமீம், தூத்துக்குடி தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி பொது மேலாளர் பி.ஆர்.அசோக்குமார் ஆகியோர் சிறப்பு வந்து நல்லா கலந்து கொள்கின்றனர்.

வெஸ்டர்ன் மெடிக்கல் மார்க்கெட்டிங் கே.கே.. செல்வம், அங்குலட்சுமி ஸ்பின்னிங் மில்ஸ் சதாசிவம், டி.எம்.ஆர். கிரீன் எனர்ஜி லிமிடெட் ரஞ்சித், வி.கே.எஸ்.எம். கிரீன் எனர்ஜி பிரைவேட் லிமிடெட் பார்த்திபன், கவின் மோகன் ஆகியோர் நொய்யல் வனம் திட்டத் திற்கு, தமது சமூக பங்களிப்பு செயல்கள் (CSR) மூலம் பங்காற்றி வுள்ளார்கள்.

இறுதியில் குட்டப்பாளையம் சாமி நாதன் கல்வி மற்றும் அறச்செயல் அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர், ஆனூர் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி தாளாளர் அரவிந்த் நல்லதம்பி நன்றியுரை யாற்றுகிறார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சூலூர் எஸ்.எஸ்.பொன்முடி

### அக்டோபர் 2 (2012)



**மாவட்டக் கழக துணைச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், ஒன்றியக் கழகச் செயலாளர் என்ற பொறுப்புகளை வகித்து, சூலூர் பகுதியில் கழக வளர்ச்சிக்குப் பாடுபட்டவர்.**

**சூலூர் பேரூராட்சித் தலைவர், நிலவள வங்கித் தலைவர், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கித் தலைவர், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர்,பல்லடம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆகிய பொறுப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாக மக்கள் பணியாற்றியவர்.**

**1986ஆம் ஆண்டு முதல் கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**